செ.வெ. எண்: 358 நாள்: 21.06.2012

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் துரித நடவடிக்கைக் காரணமாக 19.6.2012 அன்று இரவு இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு காங்கேசன் துறைக்கு கொண்டு செல்லப்பட்ட மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டு தமிழகம் திரும்ப உள்ளனர்.

நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள அக்கரைப்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த 9 மீனவர்கள் மின்விசைப் படகில் கடலில் மீன்பிடிக்க சென்றபோது 19.6.2012 அன்று இரவு இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு காங்கேசன் துறைக்கு அவர்களின் மின்விசைப் படகுடன் கொண்டு செல்லப்பட்டனர்.

மேற்கண்ட தகவல் கிடைக்கப் பெற்றவுடன், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்தரவின்பேரில், தமிழக அரசு அதிகாரிகள் கொழும்பில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகளுடன் உடனடியாக தொடர்பு கொண்டு, 9 மீனவர்களையும், விசைப் படகினையும் உடனடியாக விடுவிக்க நடவடிக்கைகள் மேற்கொண்டனர். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இந்த முயற்சியின் காரணமாக, நாகப்பட்டினம் மீனவர்கள் மீது எந்தவிதமான வழக்குகளும் பதிவு செய்யப்படாமல், இந்திய தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். விடுவிக்கப்பட்ட மீனவர்கள் தங்களது விசைப்படகுடன் தமிழகம் திரும்புவார்கள்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9

நாள் 21-6-2012